மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி. சி. கலைவாணி**, B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ஆம் நாள் சனிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் ஐப்பசித்திங்கள் 06 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 188/2021 -ல்**

**அசல் வழக்கு எண். 07/2018**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, கீழக்குறிச்சி கிராமம், மெயின்ரோடு, கதவிலக்கம் 4/377 என்ற முகவரியில் வசித்து வரும் கோதண்டபாணி குமாரர், இந்து, சிவமதம், 70 வயதுள்ள ஜெயபால் ...மனுதாரர் /வாதி

// **எதிர்**//

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, ஆவிக்கோட்டை கிராமம், என்ற முகவரியில் வசித்து வரும் பெரமைய நாட்டார் குமாரர், இந்து, 52 வயதுள்ள ஞானசம்பந்தம் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது அசல் வழக்கில் ஆவணங்களை காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14(3)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் ஆன நாள் :- 29.07.2021

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட் நாள் :- 03.08.2021

இம்மனு 08.10.2021ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன் , மற்றும் திரு. A. ஞானசேகரன் ஆகியோர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. R. சம்பத்குமார், செல்வி. S. வைஷ்ணவி ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## தீர்ப்பாணை உத்தரவு

01. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

( S/d. C. Kalaivani.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.